# ஒரு கிணற்றின் அருகில் ஒரு பெண் இயேசுவை சந்திக்கிறாள்

*சாட்சியளிக்க எப்போதும் ஆயத்தமாய் இருக்கும்படி சிறுவர்களுக்கு போதியுங்கள்*

சிறுவர்களின் தேவைகளுக்கும், வட்டாரப் பழக்க வழக்கங்களுக்கும் பொருத்தமான நடிவடிக்கைகளை தேர்ந்து கொள்ளவும்.

**சமாரியப் பெண்**

யோவான் 4:4-42 லிருந்து, சமாரியப் பெண்ணின் கதையை, ஒரு பெரிய பிள்ளையோ ஆசிரியரோ வாசிக்கட்டும். தேவனின் அன்பு, பாவமன்னிப்பு, நித்திய வாழ்வு ஆகிய நற்செய்தியை இயேசு தாம் சந்தித்த ஒவ்வொரு நபருக்கும் கூற ஆயத்தமாய் இருந்தார் என்பதை இது காட்டுகிறது.



முடிந்தால் பிள்ளைகள் இந்தப் படத்தை பார்த்து வரையட்டும் அல்லது வண்ணம் தீட்டட்டும்.

**கேள்விகள்:** கதையைக் கூறிய பின் இந்தக் கேள்விகளைக் கேட்கலாம். பதில் ஒவ்வொரு கேள்விக்கும் பின் வருகிறது.

- கிணற்றின் அருகில் இயேசு என்ன செய்து கொண்டு இருந்தார்? *(6)*
- குடிக்க தண்ணீர் கேட்ட போது அப் பெண் ஏன் ஆச்சரியம் அடைந்தாள்? *(9)*
- அப்பெண்ணுக்கு எந்த வகையான தண்ணீரைத் தருவதாக இயேசு கூறினார்? *(14)*
- தேவனை ஆராதிப்பதற்காக விசேஷமான ஒர் இடம் இருக்கிறதா? *(21 & 24)*
- இயேசு தாம் யார் என்று கூறினார்? *(26)*
- நிலங்கள் அறுவடைக்கு விளைந்து காணப்படுவதாக இயேசு கூறியதன் அர்த்தம் என்ன? *(பதில் இயேசுவின் நற்செய்தியை அறிந்து ஏற்றுக்கொள்ள பல மக்கள் ஆயத்தமாக உள்ளனர். ஆனால் முதலில் நாம் அவர்களுக்குக் கூற வேண்டும்).*

இந்தக் கதையின் ஒரு பகுதியை **நாடகம்** ஆக்கலாம். சபைத் தலைவரோடு பேசி ஆராதனை வேளையில் அரங்கேற்ற ஏற்பாடு செய்யவும். உங்கள் நேரத்தை குழந்தைகளுடன் செலவிட்டு நாடகத்தை ஒத்திகை பார்க்கவும். எல்லா பகுதிகளையும் பயன்படுத்தத் தேவை இல்லை.

பெரிய பிள்ளைகள் அல்லது பெரியவர்கள் நடிக்க வேண்டியவை:

- **கதை கூறுபவர்:** கதைச் சுருக்கம் கூறி பேச/நடிக்க வேண்டியவற்றை சிறுவர்களுக்கு ஞாபகப்படுத்துபவர்.

**இயேசு,** கிணற்றைக் குறிக்கும் எதாவது ஒன்றின் அருகில் அமர்ந்து இருக்கவும்.

**சமாரியப் பெண்**, ஒரு குடம் தலையில்.

- **சிறிய குழந்தைகள் ஏற்கும் பாத்திரம்:**

  **சீஷர்கள்**, உணவுடன்

  **சமாரியர்கள்**

**இயேசு** : கிணற்றின் அருகே அமர்ந்திருத்தல்

**கதை கூறுபவர்:** யோவான் 4:1-26 லிருந்து கதையின் முதற் பகுதியைக் கூறவும். பின், "சீஷர்கள் கூறுவதைக் கேளுங்கள்."

**சீஷர்கள்** : "இயேசுவே! நீங்கள் களைப்பாய் இருக்கிறீர்கள். பயணம் மிகவும் நீண்டது. இந்த கிணற்றின் அருகே அமர்ந்து ஓய்வு எடுங்கள். நாங்கள் இந்த சமாரிய கிராமத்துக்குள் போய் உணவு கொண்டு வருகிறோம்."

**சமாரியப் பெண்:** தலையில் குடத்துடன் இயேசுவை நோக்கி வருகிறாள்.

**இயேசு** : "கொஞ்சம் தண்ணீர் கொடு!"

**சமாரியப் பெண்:** ஆச்சரியம் அடைந்து "நீர் ஒரு யூதர். சமாரியப் பெண்ணான என்னிடம் குடிக்க தண்ணீர் கேட்கிறீரே?"

**இயேசு** : "குடித்தால் ஒருக்காலும் தாகம் எடுக்காத ஜீவ தண்ணீரை என்னால் உனக்குக் கொடுக்க முடியும்."

**சமாரியப் பெண்:** ஆச்சரியம் அடைதல் "எவ்வாறு அதை நீர் தர முடியும்?"

**இயேசு** : "தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மேசியா நான்."

**கதை கூறுபவர்:** யோவான் 4:27-38 ல் உள்ள கதையின் இரண்டாம் பகுதியைக் கூறவும். "சீஷர்கள் கூறுவதைக் கேளுங்கள்."

**சீஷர்கள்** : "பாருங்கள்! இயேசுவோடு பேசிக் கொண்டிருக்கும் அந்தப் பெண் யார்? அவள் குடத்தை விட்டுவிட்டு ஊருக்குள் போகிறாள். அவள் ஆச்சரியம் அடைந்து காணப்படுகிறாள். இயேசுவே! இதோ கொஞ்சம் உணவு."

**இயேசு** : "என்னிடம் இன்னொரு வகையான உணவு உள்ளது. எனது உணவு தேவனைப் பற்றி ஜனங்கள் அறிய உதவும். எப்போதும் மக்களுக்கு நற்செய்தியைக் கூற ஆயத்தமாய் இருங்கள்."

**கதை கூறுபவர்:** கதையின் மூன்றாவது பகுதியைக் கூறவும் (யோவான் 4:39-42). பின் கூற வேண்டியது, "சமாரியப் பெண் கூறுவதைக் கேளுங்கள்."

**சமாரியப் பெண்:** ஒரு பக்கத்தில் நிற்கும் சமாரியர்களிடம் கூறுகிறாள், "வாருங்கள்! இந்த மனிதரைப் பாருங்கள். நான் செய்ததை எல்லாம் அவர் எனக்குக் கூறினார். அவர் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவரா?"

**சமாரியர்கள்:** "நாம் போய் இந்த மனிதரைப் பார்ப்போம்", "அவரை நாம் விசுவாசிப்போம்."

**கதை கூறுபவர்:** நாடகத்துக்கு உதவிய யாவருக்கும் நன்றி கூறுதல்.

பிள்ளைகள் இந்த நாடகத்தைப் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால் அவர்களிடம் மேலே உள்ள கேள்விகளையும் கேட்கட்டும். கதை கூறுபவர் கேட்க வேண்டியது "நாம் எதிர்பாராத மனிதர்கள் இயேசுவுக்கு செவிகொடுப்பதை பற்றிய உதாரணங்களைத் தருக!" (மக்கள் உதாரணங்கள் தரட்டும்).

**ஒரு கிணற்றின் படத்தை வரைக:**

பிள்ளைகள் பார்த்து வரையட்டும். அடுத்த ஆராதனை வேளையில் பெரியவர்களிடம் காட்டி, தேவனுடைய ஜீவ தண்ணீரை வாங்க விருப்பம் உள்ளவர்களுக்கு அதைத் தர எப்போதும் ஆயத்தமாய் இருக்க வேண்டும் என்பதை இது சித்தரிக்கிறது என்று விளக்கவும்.



**மனப்பாட வசனம்:** கொலோ. 4:3.

**சங்கீதம்:** சங். 19:1-4 ல் வசனங்களை நான்கு சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும். அவர்கள் பெரியவர்கள் முன்னிலையிலும் கூறலாம்.

**ஜெபம்:** “கர்த்தாவே, நாங்கள் எங்கிருந்தாலும் உம்மைத் துதிக்க முடியும் என்பதால் சந்தோஷம் அடைகிறோம். நீர் எல்லா மொழி, கலாச்சார மக்கள் மேலும் அன்பு கூருகிறீர். எல்லா ஜனங்களுக்கும் எடுத்து செல்ல வேண்டிய நற்செய்தியை எங்களுக்கு அனுப்பியதற்காக நன்றி. உமது சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ள சுற்றிலும் மக்கள் ஆயத்தமாய் இருக்கிறார்கள் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ள எங்களுக்கு உதவும். அவர்களுக்கு உண்மையாய் அதைக் கூற உதவும்.”

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net